DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.257/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | கமல்(சார்பு ஆய்வாளர்) ( Pw.9) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day July of 2023

( 1,4,5,6 எதிரிகள் ஆஜர்., 2,3, 7 ஆஜர் இல்லை. மேற்படி எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை :-**

**1.** நான் தற்போது வீரசோழன் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.11.2018 ம் தேதியன்று நரிக்குடி சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது, அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காரியாபட்டி தாலுகா கம்பாளி கிராமத்தைச் சேர்ந்த தனுஷ்கோடி மகன் முத்துராமன் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 174/2018 பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 342, 506(2) உ/இ 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.(**அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 12 குறியிடு செய்யப்படுகிறது**). அதன் அசல் மற்றும் புகாரை மனுவினையும் கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அருப்புக்கோட்டை அவர்களுக்கும், மற்ற நகல்களை உயர்

அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர் 14.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி குமார், ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.(**அந்த பார்வை மகஜர் அதசாஆ 13, மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 14 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் சாட்சிகள் முத்துராமன், தனுஷ்கோடி, இருளாயி, ராமர், பூமிநாதன், ஆகியோாகளை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நதியா, வனிதா, முத்து, ராக்கம்மாள், ஜெயராஜ், ராமச்சந்திரன், குமார் ஆகியோர் கம்பாளி கிராமத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளைதேடியபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 22.11.2018 ம் தேதி 17.45 மணிக்கு திருச்சுழி பஸ்டாப் அருகே வைத்து இவ்வழக்கின் எதிரி பாக்கியராஜ் த/பெ.பெரியகருப்பன் என்பவரை கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கின் மற்ற எதிரிகள் ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்றதால் கைது செய்யவில்லை. 22.12.2018 ம் தேதி காயம் பட்ட நபர்களுக்கு அரசு மருத்துவமனை மருத்துவர் யோகேஷ் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் பிரிவுகள் 326, 452, பிரிவுகளை பிரிவு சேர்த்தல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**அந்த அறிக்கை அதசாஆ 15 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் இவ்வழக்கில் எனது விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக 147, 148, 294(பி), 323, 324, 326, 342, 452, 506(2) உ/இ 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழ் 22.12.2018 ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எ.த.கு.வி –

2. சாட்சிகள் 1 முதல் 10 வரையுள்ள சாட்சிகள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அசா1 முத்துராமன் எனது

விசாரணையில் ஆறுமுகம் அருவாளை எடுத்து என் அப்பாவின் இடது பக்க தலையில் வெட்டினார் என்று சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. ஆறுமுகம் எனது அம்மாவின் வலது மணிக்கையில் கையால் முறிக்கி முறிக்கி அடித்தார் என்று சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. முத்துமாணிக்கம் என்பவர் எனது அப்பாவை இடது பக்க தலையில் அருவாளால் வெட்டிவிட்டார் என்று சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. ராமசந்திரனை ஆறுமுகம் இடது பக்க தலையில் வெட்டிவிட்டார் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை. தம்பி பூமிநாதனை எதிரி ராஜேந்திரன் இடது பக்க தலையில் வெட்டி முதுகில் வீக்க காயத்தை ஏற்படுத்தினார் என்று முத்துராமன் சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. நாகன் என்பவர் பூமிநாதனை முதுகில் அடித்துவிட்டார் என்று கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. எனது விசாரணையில் முத்துமாணிக்கம், ராஜேந்திரன், ஆறுமுகம் ஆகியோர் சேர்ந்து கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லவில்லை. அசா2 இருளாயி எனது விசாரணையில் தன் கணவரை ஆறுமுகம் கம்பால் இடது புஜத்தில் அடித்துள்ளார் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. சங்கிலி கம்பால் தனுஷ்கோடியை இடது விலாவில் அடித்துள்ளார் என்று சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. பாக்கியராஜ் என்பவர் என் மகன் ராமசந்திரனை மண்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்று சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. ஆறுமுகம் கல்லால் என் மகன் ராமச்சந்திரனை அடித்துவிட்டதாக கூறி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. பூமிநாதனை ராஜேந்திரன் வேல் கம்பால் மண்டையில் வெட்டி காயம் ஏற்படுத்திவிட்டார் என்று எனது விசாரணையில் சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. என் கணவருக்கு காலை வெட்டி சதை தொங்கியதாக இருளாயி சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. அசா3 ராமச்சந்திரன் எனது விசாரணையில் ஆறுமுகம் கம்பால் எனது அப்பாவைஇடது புஜத்தில் அடித்துவிட்டார் என்று சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. நாகன் என்பவர் வேல்கம்பால் எனது அப்பாவின் மூக்கை

வெட்டிதுண்டாக்கிவிட்டார் என்று சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை.

3. அசா4 பூமிநாதன் எனது விசாரணையில் ஆறுமுகம் கம்பால் எனது தந்தையின் வலதுபுஜத்தில் அடித்து காயப்படுத்தினார் என்று சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. சங்கிலி என்பவர் கட்டையால் தனுஷ்கோடியின் மணிக்கட்டில் அடித்து காயப்படுத்தியதாக சொல்லவில்லை. நாகன் என்பவர் வேல் கம்பால் தனுஷ்கோடியின் மூக்கை வெட்டிவிட்டார் என்று கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. அதனால் எனது அப்பாவிற்கு மூக்கு துண்டாகிவிட்டது என்று சொல்லி உள்ளாராஎன்றால் இல்லை. நாகன் என் அம்மாவை முதுகில் அடித்துள்ளார் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. ராஜேந்திரன் ராமசந்திரனை வேல் கம்பால் தலையின் வலது பக்கத்தில் அடித்து காயப்படுத்தியதாக சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. ராஜேந்திரன் என்பவர் கட்டையால் பூமிநாதன் என்பவரை முதுகில் அடித்து காயப்படுத்தியதாக சொல்லவில்லை. முத்துமாணிக்கம் என்பவர் என் அண்ணன் முத்துராமுவை தலையில் வெட்டி காயப்படுத்தியதாக சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. அசா5 நதியா எனது விசாரணையில் பாக்கியராஜ், ஆறுமுகம், நாகன் என் அத்தை இருளாயியை கம்பை வைத்து என் அத்தையின் வயிற்றின் எத்தினார்கள் என்று சொல்லி உள்ளார்கள் என்றால் இல்லை. ஆறுமுகம் சங்கிலி, நாகன், பாக்கியராஜ், ராஜஜேந்திரன் ஆகியோர் கம்பு, வேல்கம்பு, கல் ஆகியவற்றை வைத்து எனது மாமாவின் மூக்கில் வெட்டி இடது கையை ஒடித்துவிட்டதாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. ராமர் என்ற ராமசந்திரனை ஆறுமுகம் கல்லை வைத்து எறித்து தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. அசா6 வனிதா எனது விசாரணையில் எனது மாமாவை மூக்கில் நாகன் வெட்டிவிட்டார் என்று சொல்லி உள்ளாரா என்றால் சொல்லவில்லை. ஆறுமுகமும், சங்கிலியும் என் மாமாவை கையில் அடித்துவிட்டார்கள் என்று சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. நாகன் , சங்கிலி , ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து எனது மாமியா

இருளாயியை வயிற்றில் எத்தியதாக சொல்லவில்லை. நாகன், என் கொளுந்தன் பூமிநாதனை பாக்கியராஜ், ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து வேல்கம்பால் தலையில் வெட்டியதாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. தனுஷ்கோடிக்கு மருத்துவ சிகிச்சை செய்த நரிக்குடி அரசு மருத்துவரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மாட்டு வண்டி எதுவும் கைப்பற்றவில்லை.எதிரிகளை கைது செய்யும்போது ஆயுதங்களை கைப்பற்றவில்லை. கைது செய்த எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. ரத்தக்கறை படிந்த துணிமணிகளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் மாட்டுவண்டி எந்த இடத்தில் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தனுஷ்கோடி என்பவர் வீடு பார்வை மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

4. மற்ற சாட்சிகள் வீடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் எதிரிகள் வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் நரிக்குடி காவல் நிலையத்தில் வைத்து புகார்மனு கொடுக்கவில்லை. தனுஷ்கோடி எனது விசாரணையில் தன்னுடைய இடது முழங்கையில் யார் அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இருளாயி எனது விசாரணையில் தன்னுடைய வலது முழங்கையில் யார் அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துராமன் எனது விசாரணையில் இடது முழங்கையில் 5 வது விரலில் யார் அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினமே நாகன் என்பவரிடம் புகார் மனு பெற்று புகார்தாரர்கள் 1 முதல் 5 வரையிலானோர் மீது வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான். குற்ற எண். 179/18 பிரிவுகள் 294(பி) 323, 324, 506(2), உ/இ 4 TNPHW Act ன் கீழ்வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனைமணிக்குநான் நிலைய பொறுப்பில் இருந்தேன் என்றால் 23.11.2018 ம் தேதி காலை 10 மணியளவில் நான் நிலைய த்தில் இருக்கும்போது தகவல்கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் நான் அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று நாகன் என்பவரை விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்

என்றால் சரிதான். நாகன் என்பவர் காலை 7.30 மணிக்கு கீழ்உடைக்குளம் கிராமம் வயல்காட்டில் நான் தண்ணீர்பாய்ச்சிகொண்டிருக்கும்போது எதிரிகள் எங்களை அசிங்கமாகபேசி அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து எங்கள் உறவினர் பெண்களை அவமானப்படுத்தியதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அன்றைய தினமே எனது தம்பிபாக்கியராஜ் வீட்டு வாசலில் நின்று பேசிகொண்டு இருக்கும்போது இரவு 8.30 மணியளவில் அப்போது புகார்தாரர்கள் அடித்து தாக்கியதாக சொல்லி உள்ளார். மேற்படி வழக்கில் எதிரிகளாக தவமுருகன், தவமுத்து, தனுஷ்கோடி, ராமச்சந்திரன், முத்துராமன், பூமிநாதன் ஆகியோர்களை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கின் நேரமும், குற்ற எண். 174/18 வழக்கின் நேரமும் வெவ்வேறு என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் சம்பவத்தில் பாதிக்கப்பட்டது மொத்தம் 4 பேர் நாகன், பஞ்சவர்ணம், பாக்கியராஜ், ஆறுமுகம் என்று சொன்னால் சரிதான். மேற்படி 4 பேரும் என்னிடம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அவர்களது காயச்சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குற்ற எண். 179/18 நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ 1** ஆக குறியிடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் குற்ற எண். 179/18 ன் தயார் செய்த பார்வை மகஜர் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.2** ஆக குறியிடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் குற்ற எண். 179/18 ன் தயார் செய்த மாதிரி வரைபடம் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.3** ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்படி சம்பவத்தில் நாகனுக்கு ஏற்பட்ட காயச்சான்று **எ.த.சா.ஆ 4** ஆக குறியிடு செய்யப்படுகிறது. நாகனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவர் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்றுவழங்கியுள்ளார். பஞ்வர்ணத்திற்கு வழங்கப்பட்ட காயச்சான்று **எ.த.சா.ஆ 5** ஆக குறியிடு செய்யப்படுகிறது. வழக்கில் பாதிக்கப்பட்ட ஆறுமுகத்திற்கு வழங்கப்பட்ட காயச்சான்று **எ.த.சா.ஆ 6** ஆக குறியிடு செய்யப்படுகிறது. குற்ற எண். 179/18 ல்

பாக்கியராஜ்க்கு வழங்கப்பட்ட காயச்சான்று **எ.த.சா.ஆ 7** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

6. இந்த வழக்கின் சம்பவ நேரமும், குற்ற எண். 174/18 சம்பவ நேரமும் வெவ்வேறானவை என்றால் சரிதான். அசா1 முதல் 4 வரையிலான சாட்சிகள் அனைவருக்கும் எற்பட்ட காயமானது எதிரிகளை தாக்க முற்படும்போது இருட்டுக்குள் அவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அசா1 முதல் 4 வரையிலான சாட்சிகள் அரசியல் செல்வாக்கு கொண்டவர்கள் என்பதால் அவர்களது புகாரில் குற்ற இறுதிஅறிக்கை செய்தேன் என்றாலும் எதிரிகளிடம் பணபலம், ஆள்பலம் இல்லாத காணரத்தினால் அவர்களது புகாரை MF என்று அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நாள் நேரத்தில் நிலைய பொறுப்பில் இல்லை என்றாலும் அசா1 புகார்மனு கொடுக்கவும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் வழக்கு ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் பாதிக்கப்படடதால் புகார் கொடுக்க வந்தபோது காவல் நிலையத்தில் வைத்து கைதுசெய்தேன் என்றா்லும் சரியல்ல. நான் சாட்சிகளைசரி வர விசாரணை செய்யாமல் தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரி வர விசாரணை செய்திருந்தால் இரண்டு வழக்குகளிலும் குற்ற இறுதி அறிக்கை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

7. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.